செ.வெ.எண்:48 நாள்:25.10.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொலி காட்சி வாயிலாக கிருஷ்ணகிரி மாவட்டம், போலுப்பள்ளி ஊராட்சி, அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.48 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சேவை மைய கட்டிடத்தை திறந்து வைத்தார்.**

**ஒருங்கிணைந்த சேவை மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், போலுப்பள்ளி ஊராட்சி, அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சேவை மைய கட்டிடத்தை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொலி காட்சி வாயிலாக இன்று (25.10.2021) திறந்து வைத்ததை தொடர்ந்து, ஒருங்கிணைந்த சேவை மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.மதியழகன் ஆகியோர் குத்து விளக்கேற்றினார்கள்.

ஒருங்கிணைந்த சேவை மையத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு சட்ட ரீதியான உதவிகள், மருத்துவ ரீதியான உதவிகள், காவல்துறை ரீதியான உதவிகள், உளவியல் ரீதியான ஆலோசனைகள், தற்காலிக தங்கும் வசதி மற்றும் அவசர நடவடிக்கை சேவைகள் மீட்பு நடவடிக்கை உடனடியாக பெற வழிவகை செய்யப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் இம்மைய அவசர அழைப்பு எண் (பெண்கள் உதவி எண்) - 181 (24 X 7) என்ற எண்ணணிற்கோ அல்லது நேரடியாகவோ புகார் அளித்து சேவையை பெறலாம்.

இம்மையத்தில் பணியாளர்கள்

1. OSC Centre Administrator

2 Senior Counselor

3. Case Worker - 2

4. IT Staff

5. Multi Purpose Worker

6. Driver Cum Security

என மொத்தம் 7 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.விவேகானந்தன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பூங்குழலி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.முரளி, உதவி பொறியாளர் திரு.சேகர், மருத்துவர் சுஜிதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**